**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.388 நாள்: 13.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 11.08.2026 அன்று தொடங்கி நடைபெற்ற வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் மாபெரும் அளவிலான முகாமில், கடந்த 3 நாட்களில் 6,893 தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொதுமக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும், அனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அக, புற ஒட்டுண்ணி மருந்து செலுத்தும் மாபெரும் அளவிலான முகாம் (Mass Anti Rabies Vaccination and Endectoparasiticidal camp) 11.08.2026 அன்று தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு மண்டலத்திலும் தலா 10 குழுக்களை பயன்படுத்தி ஒரே சமயத்தில் 3 மண்டலங்களில் இந்த சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக இம்முகாம் திருவொற்றியூர், மணலி மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய மண்டலங்களில் உள்ள அனைத்து தெருக்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் உள்ள தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 11.08.2026 அன்று 1,094 தெருநாய்களுக்கும், 12.08.2026 அன்று 2,552 தெருநாய்களுக்கும், 13.08.2026 அன்று 3,247 தெருநாய்களுக்கும் ஆக மொத்தம் கடந்த 3 நாட்களில் மொத்தம் 6,893 தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

இச்சிறப்பு முகாம் திருவொற்றியூர் மண்டலத்தில் மேலும் 11 நாட்களும், மணலி மண்டலத்தில் மேலும் 6 நாட்களும் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் மேலும் 11 நாட்களும் நடத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அனைத்து மண்டலங்களிலும் இம்முகாம் நடத்தப்பட்டு 75 வேலை நாட்களுக்குள் சுமார் 2,00,000 நாய்களுக்கு ரேபிஸ் நோய்த் தடுப்பூசியும் மற்றும் அக புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்தும் (Anti Rabies Vaccination and Endectoparasiticidal) அளிக்கப்படவுள்ளது.

இந்தச் சிறப்பு முகாம்கள் மூலம் "வெறிநாய்க்கடிநோய் இல்லா சென்னை" (Rabies Free Chennai) என்ற இலக்கை அடைவதற்கு பொதுமக்களும், செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களும் மற்றும் விலங்கு நல ஆர்வலர்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**